இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 10-06-2025

# தேர்தலில் பா.ஜ.க.வின் சதிகள்!

மக்களுக்கு நன்மை செய்து வாக்குகளை வாங்கும் ஜனநாயக வழிமுறை பா.ஜ.க.வுக்குத் தெரியாது. 'எதையாவது' வைத்து, 'எதன் மூலமாவது' வாக்குகளை மடை மாற்றிக் கொள்ள பா.ஜ.க. தனது சதிச் செயலை ஒவ்வொரு தேர்தலிலும் செய்து வருகிறது. இதனை டெல்லி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் கட்டுரையாக எழுதி அம்பலப்படுத்தி இருக்கிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. மகாராஷ்டிரா மாநில சட்டசபைத் தேர்தலை மையப்படுத்தி இந்தக் கட்டுரையை அவர் எழுதி இருக்கிறார்.

ராகுல் காந்தியின் இந்தக் கட்டுரையை அனைத்து எதிர்க்கட்சிகளும் உன்னிப்பாகக் கவனித்து எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் - கடுமையான தேர்தல் பரப்புரை செய்ய வேண்டும் - என்பதற்கு இணையானது பா.ஜ.க.வின் இதுபோன்ற சதிகளை அறிந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதும் ஆகும்.

**"மராட்டிய மாநிலத் தேர்தல் முடிவுகள் சந்தேகத்திற்கு உரியதாகவே இருக்கிறது. அதில் நடந்த மோசடியை மறைக்க எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீறி, அது தேர்தல் கமிஷனின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களில் இருந்தே அப்பட்டமாக தெரிகிறது. அதனை நான் உங்களுக்கு பட்டியலிட்டு சொல்கிறேன்"** என்ற முன்னோட்டத்துடன் இந்தக் கட்டுரையை ராகுல் காந்தி எழுதி இருக்கிறார்.

**★ முதலாவது, தேர்தல் கமிஷனரை நியமிக்கும் குழுவை ஒன்றிய அரசு மாற்றி அமைத்தது. அதற்காக 2023- ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தின்படி, குழுவில் இருந்த தலைமை நீதிபதி நீக்கப்பட்டார். தற்போது அதில் பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகிய மூவர் இருக்கிறார்கள். அதில் பிரதமர், உள்துறை அமைச்சர் எடுக்கும் முடிவுக்கு, எதிர்க்கட்சித் தலைவரால் என்ன செய்ய முடியும்?**

**★ இரண்டாவது, போலியான வாக்காளர்களைச் சேர்த்தது. கடந்த 2019-ஆம் ஆண்டு மராட்டிய சட்டசபைத் தேர்தலின் போது 8.98 கோடி வாக்காளர்கள் இருந்தனர். 2024-ஆம் ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தலின் போது இது 9.29 கோடியாக உயர்ந்தது. ஆனால் அதே ஆண்டு நவம்பர் மாத சட்டசபைத் தேர்தலில் இது 9.70 கோடியாக அதிகரித்துவிட்டது. அதாவது 2019 மற்றும் 2024 - ஆம் ஆண்டுகளுக்கு இடையே 5 ஆண்டுகளில் 31 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். 2024- ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து நவம்பர் மாதத்துக்குள் 5 மாதத்தில் 41 லட்சம் பேர் சேர்த்து இருக்கிறார்கள்.**

**★ மூன்றாவது, வாக்குச் சதவீதம் அதிகமானது. தேர்தல் கமிஷன் தரவுகளின்படி, மராட்டிய தேர்தலில் மாலை 5 மணி வரை 58.22 சதவீதம் வாக்குகள் பதிவானது. ஆனால் இறுதி வாக்கு சதவீதம் 66,05 சதவீதம் என்று உள்ளது. அதாவது 5 மணிக்கு மேல் அதிகம் பேர் வாக்களித்து இருக்கிறார்கள்: இதனால் 7.83 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. இது 76 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்து இருக்கிறார்கள்.**

**★ நான்காவது போலி வாக்குகள். மராட்டியத்தில் 1 லட்சத்துக்கு அதிகமான வாக்குச்சாவடிகள் உள்ளன. ஆனால் அதில் 85 தொகுதிகளில் உள்ள 12 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் மட்டும் புதிய வாக்காளர்கள் அதிகளவில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சாவடிக்கும் சராசரியாக 600 வாக்காளர்கள் மாலை 5 மணிக்குப் பிறகு வந்திருக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு நிமிடம் என்ற அடிப்படை கணக்கிட்டால் வாக்களிப்பு இரவு 10 மணி வரை நடந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. அப்படியானால் இந்த கூடுதல் வாக்குகள் எப்படி பதிவானது?. இந்த 85 தொகுதிகளிலும் பா.ஜ.க. கூட்டணியானது பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று இருக்கிறது.**

**உதாரணமாக காம்தி சட்டசபைத் தொகுதியை எடுத்துக் கொள்ளலாம். கடந்த 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இந்த தொகுதியில் காங்கிரஸ் 1.36 லட்சம் வாக்குகள் வாங்கியது. பா.ஜ.க. 1.19 லட்சம் வாக்குகள். அதே ஆண்டு நவம்பர் மாதம் நடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அதே 1.36 லட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆனால் இப்போது பா.ஜனதா 1.75 லட்சம் வாக்குகளைப் பெற்று இருக்கிறது. அதாவது 56 ஆயிரம் வாக்குகள் அதிகரித்து இருக்கிறது. இது எப்படி முடிந்தது?. இந்த இரண்டு தேர்தல்களுக்கு இடையில், காம்தியில் 35 ஆயிரம் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்காதவர்களும், இந்த 35 ஆயிரம் புதிய வாக்காளர்களும், ஏனோ துல்லியமாக பா.ஜ.க. பக்கம் கவரப்பட்டுள்ளனர். அவர்கள் இந்த கவர்ச்சிக்கு ஈர்க்கப்பட்ட விதத்தைப் பார்த்தால், அதில் ஒரு 'தாமரை' வடிவம் கொண்ட தொலைநிலை காந்தம் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.**

**★ ஐந்தாவது ஆதாரங்களை அழிப்பது. 2024 நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டசபைத் தேர்தல்களுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை நாங்கள் கேட்டதற்கு, தேர்தல் கமிஷன் கொடுக்க மறுத்துவிட்டது. அதைவிட மோசமானது, சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஒரு மாதத்துக்குள், ஒரு வாக்குச்சாவடியில் நடந்த வாக்களிப்புக்கான சி.சி.டி.வி. மற்றும் வீடியோ காட்சிகளை வெளியிட உத்தரவிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக ஒன்றிய அரசு தேர்தல் நடத்தை விதிகளை திருத்தம் செய்தது.**

- என்று ஐந்து ஆதாரங்களை அடுக்கி இருக்கிறார் ராகுல் காந்தி. இது மராட்டியத்தில் மட்டுமல்ல; மேலும் பல மாநிலங்களில் நடந்தவை தான். இதனை மற்ற மாநிலங்களிலும் அமல்படுத்துவார்கள்.

போலி வாக்காளர்களைப் பட்டியலில் சேர்த்தல், வாக்காளர் வாக்குப் பதிவை உயர்த்துதல், பா.ஜ.க. வெற்றிபெற வேண்டிய பகுதிகளில் போலி வாக்காளர்களைச் சேர்த்தல், அதன்பிறகு அதற்கான ஆதாரங்களை மறைத்தல் போன்றவற்றை 'மேட்ச் பிக்சிங்' மாதிரி செய்கிறது பா.ஜ.க.

தேர்தல் ஜனநாயகம் என்பதை சூதாட்டத் தேர்தலாக மாற்ற நினைக்கிறது பா.ஜ.க. அதனை மக்களாட்சி அமைப்புகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு தடுத்தாக வேண்டும்.

**பா.ஜ.க. நடத்தும் மிக மோசமான ஆட்சியை விட மிக மோசமானது அது தேர்தல் நடைமுறைகளில் செய்யும் அநியாயங்கள் ஆகும். இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.**



முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.6.2025) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் அலுவல்சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை சமர்ப்பித்தார். இந்நிகழ்வின்போது, மாநில திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, உறுப்பினர் செயலர் திருமதி எஸ்.சுதா ஆகியோர் உடனிருந்தனர்.

### வேலைவாய்ப்புகள் - நீடித்த வளர்ச்சி இலக்குகள் - வாகன உற்பத்தி எதிர்காலம் - அறிவுசார் பொருளாதாரம் தொடர்பாக

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் மாநில திட்டக்குழுவின் அறிக்கைகள்!

## துணை முதல்வர் - உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூன் 10-**

**மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030தமிழ்நாட்டின் தொலைநோக்கு ஆவணம், தமிழ்நாட்டில் ஆட்டோமோட்டிவ் (வாகன உற்பத்தி) துறையின் எதிர்காலம் மற்றும் அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி தமிழ்நாட்டை வடிவமைக்கும் பாதை ஆகிய நான்கு அறிக்கைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (9.6.2025) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சர் மற்றும் மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 1) தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள் 2) நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 தமிழ்நாட்டின் தொலைநோக்கு ஆவணம் 3) தமிழ்நாட்டில் ஆட்டோமோட்டிவ் (வாகன உற்பத்தி) துறையின் எதிர்காலம் 4) அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி தமிழ்நாட்டை வடிவமைக்கும் பாதை ஆகிய நான்கு அறிக்கைகளை சமர்ப்பித்தார்.

மாநில திட்டக் குழுவானது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படும் ஓர் உயர் மட்ட ஆலோசனைக் குழுவாகும். தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி மக்கள் நலதிட்டங்களை மதிப்பீட்டு ஆய்வு செய்வதிலும், அரசு ஆளுகையில் எழும் புதிய தேவைகளுக்கேற்ப கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், பல்வேறு ஆய்வுகள் நடத்தி அறிக்கை தயாரிப்பதிலும் தனது பங்களிப்பை மாநில திட்டக் குழு நல்கி வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப்பித்த அறிக்கைகளின் முக்கிய அம்சங்கள்:

**1. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள்**

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வேளாண் சாரா பணிகளில் தன்மை மற்றும் அளவினை அறிந்து கொள்ளும் முக்கிய நோக்கத்துடன் வேளாண் சாரா வேலைவாய்ப்பு குறித்த ஆய்வு மாநிலத் திட்டக் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு தமிழ்நாட்டின் அதிக வேளாண் சாராத பணிகளைக் கொண்டுள்ள மாவட்டங்கள் மற்றும் குறைந்த அளவு வேளாண் சாராத பணிகளைக் கொண்டுள்ள ஆறு மாவட்டங்களிலுள்ள 12 தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில், வேளாண் பணிகளிலிருந்து, அதிகளவில் வேறு துறைகளுக்கு மாறும் நிலை காணப்படுகிறது. கட்டடம் மற்றும் உற்பத்தி துறைகள் போன்ற வேளாண்மை சாராத துறைகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது 75%க்கும் அதிகமான ஆண் தொழிலாளர்கள் மற்றும் 50%க்கும் அதிகமான பெண் தொழிலாளர்கள் வேளாண்மை அல்லாத துறைகளில் வேலை செய்யும் நிலை உள்ளது என்பதை இந்த ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.

இது 2012க்குப் பிறகு வேளாண்மைத் துறையின் சதவீதத்தில், 20% குறைந்துள்ளது என்பதையும் குறிக்கிறது. இது ஊரக வாழ்வாதாரத்தில் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றத்தைக் காட்டுகிறது. இந்த ஆய்வின்படி, 15 முதல் 34 வயதுக்குட்பட்ட இளம் தொழிலாளர்களே இந்த மாற்றத்தின் முக்கிய காரணியாக இருந்து வருகிறார்கள் எனத் தெரியவருகிறது. அதிக ஊதியமும்நிலையானவேலை வாய்ப்புகளும் இளைஞர்களை வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகளுக்கு ஈர்த்துள்ளன. கட்டடத் தொழில் இளைஞர்களிடையே, முதன்மையான துறையாகவும், பெண்களிடையே உற்பத்தித்துறை முக்கிய வேலை வாய்ப்பு துறையாகவும் உருவெடுத்துள்ளது.

**2. நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 "நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் தொலை நோக்கு ஆவணம்"**

"நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் தொலைநோக்கு ஆவணம்" தமிழ்நாடு அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் சார்பில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, 2030ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி திட்டமான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் உள்ள 17 இலக்குகள் வாரியாக அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. மேலும், இந்த ஆவணம் பல்வேறு இலக்குகளில் மாநிலத்தின் தற்போதைய நிலை மற்றும் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு நலத்திட்டங்கள், சிறப்பு முயற்சிகள் மற்றும் கொள்கை உருவாக்கங்கள் மூலம் தமிழ்நாடு அரசின் முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டுகிறது. இந்த ஆவணம், ஒவ்வொரு இலக்கினை அடைவதற்கான உத்திகள் மற்றும் செயல் திட்டங்களையும் கொண்டுள்ளது.

**3. தமிழ்நாட்டில் ஆட்டோமோட்டிவ் (வாகன உற்பத்தி) துறையின் எதிர்காலம்**

மாநில திட்டக் குழு, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் (Guidance Tamil Nadu), ஆட்டோ கார் நிறுவனத்தின் நிபுணத்துவத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட "தமிழ்நாட்டில் ஆட்டோமோட்டிவ் (வாகன உற்பத்தி) துறையின் எதிர்காலம்" என்ற அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கை தமிழகத்தின் வாகன உற்பத்தி துறையின் அடுத்த கட்ட வளர்ச்சியை விவரிக்கிறது. வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, கால நிலைக்கு ஏற்ப மற்றும் நிலைத்த தன்மையுடன் கூடிய வலுவான அடித்தளத்தை உருவாக்க உள்ளது என்று இவ்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகனம், கலப்பினம் (Hybrid), ஹைட்ரஜன், சிஎன்ஜி (CNG) மற்றும் டீசல் உள்ளிட்ட பல தொழில்நுட்பங்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளூர்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் அரசின் கொள்கை வடிவமைப்பை வலுப்படுத்தலும் முக்கிய பரிந்துரைகளாக வலியுறுத்தப்பட்டுள்ளது. மின் வாகன உற்பத்தியில் முன்னணி மாநிலமாக இருப்பதால், 2030 ஆம் ஆண்டுக்குள் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு மின் வாகனம் அமைப்புகள், பேட்டரி தொழில்நுட்பம் மற்றும் ஆட்டோமேஷன் ஆகியவற்றில் திறன்களை மேம்படுத்துவதன் அவசியத்தையும் இவ்வறிக்கை எடுத்துரைக்கிறது. இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கிய பரிந்துரைகளில், மின்னணு வாகனக் குழுக்கள் (EV Clusters) அமைத்தல், ரோல் ஆன் ரோல் ஆஃப் (RORO) துறைமுகங்கள் மற்றும் பன்முக போக்குவரத்து மையங்களை மேம்படுத்தல், திறன் பூங்காக்கள் வழியாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை விரிவுப்படுத்துதல் ஆகியவை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தொலைநோக்கு திட்டமான 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் பொருளாதார இலக்கை அடையவும் காலநிலைக்கு உகந்த மற்றும் புதுமைக்கான மையமாகவும் தமிழ்நாட்டை மாற்றிட இந்த அறிக்கை வழிவகை செய்கிறது.

**4. தமிழ்நாட்டை அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி வடிவமைக்கும் பாதை**

மாநில திட்டக் குழு மற்றும் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் (Guidance Tamil Nadu), பிசினஸ் ஸ்டாண்டர்டுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட "தமிழ்நாட்டை அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி - வடிவமைக்கும் பாதை" என்ற அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் மதிப்புடைய பொருளாதாரமாக மாற்றும் தொலைநோக்கு திட்டத்தை முன்வைக்கிறது.

உலகளாவிய திறன் மையங்கள் (GCCs) மற்றும் உற்பத்தித் துறையின் எதிர்காலம் ஆகிய இரு துறைகளிலும், தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதை இவ்வறிக்கையில் தெளிவாக விளக்கப்படுகிறது. தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் நிலைத்த வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு உற்பத்தித் துறையில் வளர்ச்சியை ஊக்குவிக்க இவ்வறிக்கை பரிந்துரைக்கிறது. குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSME) துறையை வலுப்படுத்தல், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை ஆகியவையும் முக்கிய அம்சங்களாக இடம்பெற்றுள்ளன. இவ்வறிக்கை, அனைவருக்கும் பயனளிக்கும் ஒருங்கிணைந்த மற்றும் செம்மையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி, சமூகநீதி மற்றும் அறிவுசார் பரிணாமத்தை ஒருங்கிணைக்கும் விரிவான செயல்திட்டமாக இவ்வறிக்கை அமைந்துள்ளது.

இந்த நிகழ்வின்போது, மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி. சுதா எஸ். ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.6.2025 அன்று சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றியமைக்காக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமாருக்கு பசுமை விருது வழங்கினார். அதனைத் தொடர்ந்து நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களை நேற்று முன்தினம் (08.06.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார் சந்தித்து அவ்விருதினை நேரில் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.